500

உ

ஸ்ரீசரவணபவன் துணை

OFFICE OF THE REGISTRAR OF B…
MADRAS

சரவணைக்குமரன்

பஜனாலங்கிர்தக் கீர்த்தனம்.

கன்னிச்சமீன் சரபம் மகா-ா-ஸ்ரீ உடுமலை
முத்துச்சாமிக் கவிராயர் அவர்களின் குலதிலகரும்

தாடிக்கொம்பு ஸ்ரீ லெக்ஷிமி விலாச ராமானந்த சபா
மானேஜர்
M A. நாச்சிமுத்து முதலியாரவர்களின் மாணவருமாகிய

அரசமரத்துப்பட்டி நாடக உபாத்தியாயர்

V. T. பெருமாள் செட்டியார்

அவர்களால் இயற்றியதை

திண்டுக்கல் கச்சேரித்தெரு

விஜயரெங்கம் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1927 [அணா 6

Q26:417
N27
86002

Nachimuthu Mudaliar. M.A.

AUTHOR. V. T. Perumal Chettiyar.

நட்டாத்தீஸ்பரன் கோவில் வடுகபட்டி

M. அங்கமுத்து உபாத்தியாயரவர்கள்

இயற்றிய சாற்றுக்கவி

மாவணிதை மேவுசித மாதவர்கள் வாழாச
மாத்தி னன்னகர் வாசனும்
வணிகர்குல திலகஜெய திருப்பதிக் குரிசில்செயு
மாதவத் தோங்கு சீலன்
தேவவிசு வாசமிகு நேசபெரு மாள்கலைக
டேர்ந்துலகு ளோர்வியப்பத்
திகழ்சாவ ணக்குமா னலங்காரக் கீர்த்தனம்
செப்பிஞனுள்முனியுமிப்
பாவினிசை பலராக தாளமொடு சங்கீத
பாத்ரனென் றேமகிழ்வெண்
பங்கயநங் கையுமாசி கூறிநற் சொற்பொருட்
பண்புமிகு காவியுமென
பூவிலுயர் பாவலர்க நாவலர்க ளோர்ந்தினிய
புத்தமுத மொத்ததெனவே
போதசிவ ஞானகும ரேசனடி யைத்தினம்
போற்றுநா விசைவலோனே

வார்த்தனத்துக் குஞ்சரிநாதன் சரவணக் குமரன் மாவலங் காரக்
கீர்த்தனத்துக் குஞ்சரியா ரிசைவலர்க ளெனப்புலவர் கேட்டுப்
பொன்னூற்
கோர்த்தனத்து நித்திலத்தை யொத்ததெனக் கூறவிலை
கோடா கோடி
சித்தனத்தைப் பெருமெனத் தேசாதி குலைப் பெருமாள்
செப்பினனை

திண்டிமாநகர் அமுர்த கவி

கா. ம. காளிதாஸ் பிள்ளை அவர்களின்

பிரதம மாணக்கர்

G. பாலதாஸ் அவர்கள்,

பண்பொடு பகர்ந்த பாக்ய கவி.

மானகர வாதிச் செழியதமிழ்ப் பிரபந்த வாழ்த்துவேள்கு
மானகல மார்பிற் புனைகளப மாலையென மாணரச
மானகர வாசன் வணிகர்குல திலகபெரு மாள்புகழ
மானகா ரோடும் புவியருா கரும்மெச்ச வழுத்திணை

கண்டவர்க்குக் காட்சிதரும் கற்பனைத்தெள்
ளமுதூட்டுங் கையெடுத்துக்
கொண்டவர்க்குப் பொருளியற்றும் கேட்டவர்க்குக்
களிப்பளிக்கும் குற்றம்நீங்க
விண்டவர்க்கு நலம்பயிற்றும் விற்பனத்தை
விளைவிக்கும் வெற்றிவீர
தண்டவர்க்குச் சூட்டவென வேபெருமாள்
உரைத்தகீர்த் தனமிதாமே

கணபதி துதி பின்முடுகு வெண்பா.

இலங்கார மார்ப னெழில்சரவ ணக்குமர
னலங்காரக் கீர்த்தனத்தை யான்பாட—வலங்காண
வக்கனிக்கி மூக்கணக்கன் பக்க நிமிடத்தில்வந்த
கைக்கரிமு கத்திறைவன் காப்பு

மூலநாயகன் துதி

பூரணச்சந்திரோதயமென்றால் என்றமெட்டு

ராகம்நாட்டை பல்லவி தாளம் ரூபகம்

வாகணநாதா துணைதாதா—சந்ததமெனதிடம் (வா)

அ. சந்தம்

1. மைந்தன் பாடிடு செந்தமிழ் சந்தந்தா னன்கதுபெற (வா)
2. வாதா குண நிதியே கணபதியே கதியே நீகெதியே (வா)
3. வல்லபை நாயகா செல்வ விநாயகா நல்லவர்தாயகா (வா)
4. வாலையருள் பாலகனே மதுரிதகன ஜெயவிதா ஹ (வா)

சரணம்.

ஆகுவாகனங்கொண்டானந்தமேலா
அவ்வுவக்கருளும் ஐந்து கர மூலா
ஏகபராபரனே யனு கூலா
பின்பமுடன் பண்பெருமாள்
குப்பிடுமெய் யன்பனும் நீ (வா)

கலைவாணி துதி

ராகம் மத்தியமாவதி தாளம் ஆதி

நீடூழிவாழிவாழியே என்ற மெட்டு

(பல்லவி)

வாணி வரமருள்வாய் பேணி
வா வா வாதகலை (வா)

(அநுபல்லவி)

தானீ சுரர்பணிகொள்வேணி பங்கஜாராணி
தங்கிடுமம் புவி யெங்குமுழங்கிடு
முன்பதமன் பொடு நம்பிடவுங்கலை (வா)

சரணம்

கீதம்விண்ணோர் மகிழ்நன்னீதம்—தெய்வாதீனப்பிர
சாதம்அளித்திடும் உன் பாதம்—தநிபணிக்தேன்
கிஞ்சுகாஞ்சிதமிஞ்சுமுதாரணியே—நான்முகத்தோடு
கொஞ்சுமலங்கிர்த வஞ்சிமனோகரியே—தயைபுரியே
கோரிடுபண்பெரு மாள்கவிமாலை
நீபுனைவாயிது வேனலவேளை
ஆரணஞான கல்யாணி நின்தாளை
அதிபக்குவ—முடனித்தமு
மனமுற்றிடு—துழவிக்கருள் (வா)

சுப்பிரமண்யர் துதி.

ராகம் தோடி (பல்லவி) தாளம் ரூபகம்

ஆரணப்பொருளானதற்பரனே
அழகியதிட வேற்கரனே (ஆ)
அரம்பைகமு கடர்ந்துநல வளர்ந்தருகுதடம்பழனி (ஆ)
அருணகிரிக் கருளுதவிய குமரனேகுறமகள்மருவிய (ஆ)
அரிமருகாசுரர்பணிகொளு மணிமுருகா ஜெயசுபகர (ஆ)
ஆதிசக்தி யாள்கொடுத்தவேல்பிடித்து சூரபத்மனோர்குலத்
தைவேரறுத்த (ஆ)

சரணம்

காரணஞானக்கரும்பெனும் மூலன்
கஞ்சமலர்த்திதெய்வகுஞ்சரி லோலன்
பூரணமாய்ப்பணிவோர்க்கனு கூலன்
போகர் மலைத்தம்பி ரானெடு வேலன்
புத்தமிர்த வித்துவகவிப்புலவர்
சித்தமகிழுற்றிடு தமிட்பெருமாள்
நித்தமுமனத்தினிற்துதித்திடும
கத்துவமிகுத்தமயில் நர்த்தனமெய் (ஆ)

(என்கனவுதான் என்ற மெட்டில் சரணம் வேறு)

ராகம் பியாகடை தாளம் ரூபகம்

பல்லவி

சத்தியுமையவள் பெற்ற கதிர்வேலா—யோகானுகூலா
தற்பரா சமரா சற்கருளும் மூலா—காருண்ய லோலா (ச)

சரணம்

அத்தனிடம் மந்திரம் அளித்த வேதா
அருணகிரிக் குபதேச போதா
சித்தர் முனிவர்கள் பணியுந்தாதா
தேவர்கள் காவலனேவினோதா (ச)

ஷேடிபல்லவி

நித்தமுந்தனை நத்தினேன் தேவா—மால்மருகவா
பக்திமோக்ஷ பலன்தனைத்தாவா—யேழையைக்காவா (நி)

சரணம்

சத்குமார குருபர கெம்பீரா
சாமிசரவணபவா செந்தூரா
வித்வகவிப் பெருமாள்க் காதாரா
வேளைமயில்மிசை வாசிங்காரா (ச)

(பக்தி கொண்டாடுவோம் என்ற மெட்டு)

இராகம் ஆனந்த பைரவி தாளம் ஆதி

பல்லவி

சத்திவேலாயுதா—ஞான சத்திவேலாயுதா

அ. சந்தம்

1. தகுந்தந்தி முகன்தம்பி யெனுங்கந்த சரவண குருபரனே (ச)
2 சற்சனர்க்கருள ளித்தநற்பிரபல விற்பனக்குழகசுப்பிரமண்ய (ச)
3. தடபுவியதை யரைநொடிதனில் வலமிடவரு திடமருவிய (ச)
4. தாரணிக்குளே சிறந்தபழ னுபுரிக்கணே யமர்ந்த (ச)

5. தயைவைத் துனதிடகலபச் சிகிமிசைவாவித் தடையென (ச)
6. சாலோக சாமீப சாரூப சாயுச்யந் தருவாய் கிருபாகர (ச)
7. தஞ்சம்பொன் பாதந்தந்தாள் தவமுனிவர்கள் தொழுமாகரா (ச)
8, சதுர்மறை வேதனைச்சிறை யிடுமுருகாசிவ னுக்கொரு
பிரணவ மோதலுற்ற (சத்தி)

அ.பல்லவி

நத்திடு மிமையவர் துயர்பொடிபடக்கொடி
நாட்டி—சூர்குலமே
வாட்டி—யேமனுலகி
லோட்டி—யன்பொடன்
ஹுளில்தேவசேனைக்காவலா (சத்தி)

சரணம்

திருவினோத நாரதமுனி சொனவொரு
குறமின்ஹுளி ஹுவலாஹு மையல்கொடு
விரைவில் வேடரூபமாகி வந்தவள்
தினைவனந்தனிலே வெறுவிவந்ததொரு
கலைமானெங்கேயென வழிதொடர்ந்தவிடம்தேடியே
பண்—பானமங்கை பரணேரில்நின்று பல
காதலின்பமொழியே புகன்றுவரு
மாகிராதர்களேயே தெரிந்துதரு
வாகமாறியவர் பாலிருந்து
வளையல் விற்றிடும் முருகசெட்டியென
மதுரமுற்றமொழி யதுவுரைத்துகன
தடிபிடித்தகிழ வுருவெடுத்துநல

தமையனைத்தொழுது வளிதனைக்குலவி தார்மணம்பெற்றவீரா
சாமளவண்ணஹரி மால்மருககுமா சாமிவரதகருணாகரவடிவுனீ
சந்தந்திடம்பொலிந்திடும்அருள் தாதா நீதா மாமறை
வேதா நாதா செந்தமிழ்
சாரமுற்றபெரு—மாளுரைத்தகவி— மாலைபெற்றுதவு
சமரசசுமுகவிசேசா—குகமுருகேசா—தணிகைவாசா (சத்தி)

ஸ்ரீ ராகவனே என்ற மெட்டு.

ராகம்: காம்போதி. தாளம்: ரூபகம்,

பல்லவி.

சரவணபவா தேவா துணைவா

அநுபல்லவி

ஆரூர்தரு சுதனே குக சரணாகதி யருளே புரி

சரணம்

1. வரமிகு முரைதரும் வேலா திறமொடரக்கருயிர் மாளத்
திருகியகுலையதுபோலத் தரையினி லவனுடல் வீழப்
பிரணவ முறையது நீடத் தெரிதினை வனமதில் வேடக்
குறமக ளுடனே வாழக் குஞ்சரனைக் கெஞ்சிய பொன்
ரஞ்சிதனே சஞ்சலந்தீர் (ச)

2 நமோதிட புயாசலகு மாரகுரு சாமியே ந
மோ கனக மாமுரு வாகலப வாகனா ந
மோ கிருபை யேதாவி தே தருணா மேவரு ந
மோ வரஹ ராவெனவெ னோமுனை யேபணியவு
நற்கதியைத் தரு முத்தம
சித்தனுனைத் தின நத்தினேன் (ச)

பதாம்புயமே தான் தரும் தாரணிக்கு ஞாதிசய
ஞங்கரிமுகோன் துணைவ ஞங்குழக ஞந்தோளப
மால் மருக ஞம்பரனி ஞேர்சுதனுமாம்பழனி
யான் கருணை யான்தயவை யான்கருதி னேனெனதிடம்
நாடியே மாமயி லேறியே
வாவடி வேலுடனீயே (ச)
வரமிகு சிருபாலகனே வாகுகனேவா
அருளீவா சமையமே காவா
பூமிபுகழ் மாபெருமாள் சாமிதமிழ் மாலைபுனை
புண்யா மணிவண்யா சிவகண்யா சுப்பிர மண்யா (ச)

(சுஜன ஜீவனு என்ற மெட்டு)

இராகம் கமாஸ் . தாளம் ரூபகம்

பல்லவி

பாம சீலனே திருப்—பரங்குன்றானே சாமி (ப)

அநு பல்லவி

பிரமதேவனை சிறை—பிடித்த நாதனே யென்
பிழையேற்றுன தருள்பாலித்து பேணும்போதனே சாமி (ப)

சரணம்

சரவணபவா சமாசகுரு சாமியே சதா
சரணமேசெயு மடியவருளந்தனில் வாழ்பவா
திரமயூரவா—கன சேவலாகர வா தேவா
திருமாகவிப்—பெருமாள்தொழும்—செங்கைவேலவா சாமி (ப)

தோழிலே சேஷின என்ற மெட்டு (சுருள்)

இராகம் சுத்த பங்காளா தாளம் ஆதி

பல்லவி.

குருநாதா குன்றைக் குடியுறு மறுமுக நறுமலர்ப்பாதா

அனுபல்லவி.

கூவினேன் வாதா குறத்தி சமேதா.

சரணம்.

திருவடி தொழுதேன் தினமுனைப்பணிந்தேன்
தீனதயாபரா திகழுறமொடு நல சரவணையதில்வளர் (கு)

ஷெடி பல்லவி.

பிறை சூடுங்கர்த்தன் பிரபலவாமதிலுருவெனவந்தாய்

அனுபல்லவி.

பிரணவவேதா பெருமாள் சங்கீதா

சரணம்.

இருகரங்குவித்தேன் எனதுளம்பூரித்தேன்
ஏகபராபரா எந்துயரோடிடவுந்துணை தந்திடுங் (கு)

(கோவிந்தம் கோவிந்தம் என்ற மெட்டு)

ராகம் தேசிகதோடி தாளம் ஆதி

பல்லவி.

வாருங்கள் வாருங்கள் வாருங்களே—வரங்
கேளுங்கள் கேளுங்கள் கேளுங்களே

அனுபல்லவி.

வர்ணமயில் வேலவனும்
அன்னைவள்ளி மோகனனிடம் (வா)

சரணம்.

சீர்வள மோங்கும் வைகாபுரி நாடி
சென்று மகிழ்வுடனின்று நீராடி
பார்புகழ் நன்மலைபாதையே கூடி
பாலதெண்டாயுதன் பொன்னடி தேடி (வா)

2. தேனும் பஞ்சாமிர்தம் பாலபிஷேகம்
செய்திடவே வருவார்களின்வேகம்
காணும்சரவணக்காக்ஷி யனேகம்
கண்டுமகிழ்வடைவோமிது நேரம் (வா)

3. சர்க்கரைக்காவடி மிக்கவெதேஷ்டம்
தஞ்சமுனதடிபார்களின் கூட்டம்
பக்திமிகும் பஜனையொருகோஷ்டம்
பங்குனியுத்சவப் பாரதேரோட்டம் (வா)

4. தந்தியைந்துகரன் தம்பிவிசேஷன்
தங்குந்திருவாவினன்குடிவாசன்
சந்ததமும் பெருமாள்பணியீசன்
சத்ருசங்கார மலைமுருகேசன் (வ

ஓம் சரவணபவா என்றமெட்டு

ராகம் தோடி தாளம் ஆதி

பல்லவி

தேன்பழனிநகரா திடவுதாரா (தே)

அனுபல்லவி

மான்மகள்மருவும் மயூரவாகா
மாயன்மருகனே யென்துயர்தீர் (தேன்)

சரணம்.

1. வானமார்பெறவே வாமேதரவே
வருமென்குரு வே மகி மு ரு வே (வா)
மோனஞானவழி முறைசொலுந்தேவே
மூர்த்தியான கார்த்திகேயா கீர்த்தியானின் சீர்த்தியேதா
(தே)

கா கடவுளின்பாலா கருணையின்மூலா
கடம்பணிவேலா கார் யா னுகூலா (கா)
மா கவுரியருள் மைந்தா சுசீலா
மாக்ஷியுன்கடாக்ஷியிவா யேச்சிலாதகாக்ஷிதாவா (தே)
வா வையாபுரியனே வந்திதமெய்யனே
பன்னிருகையனே வா வா ஐ யனே (வா)
பாவலன்பெருமாள் பணிகொள்தியாகனே
பாக்யநாதா யோக்யமேதா சிலாக்யவேதா ரோக்யநீதா
(தே)

(அருளோங்கிய மாதவசிங்காரன் மெட்டில் பின்வேறு)

ராகம் மத்யாவதி தாளம் ரூபகம்

பல்லவி

திரிகாலமும் குமரன்பொன்னடி
தெரிசித்தட வினிமுற்பவ வினையற்றிடு மெனநத்திடு (திரி)

அநுபல்லவி

அரிமருகன் திருபழனம் புரிமருவும் மணிமுருகன்
ஆடும்மாமயிற்குகந்த சாமியே குகாசிறந்த அருள்செயேதினம்

சரணம்

தந்தைக் கொருவித்தைப்பொருள் தந்தக்குகலோலன்
செந்திற்பதியநந்தக்குரு செங்கைத்திடவேலன்
தயைதந்திடுகதிர்காமன் நயசுந்திரவதி பூமன்
சுரமங்கையினுப காரன் குழகன் கனமிகுவீரன்
கொக்கரித்தசேவலைக் கொடிப்பிடித்தே சூரைத்தொ
லைத்தழித்ததேவனும கத்வமுற்ற மூலனுன
குருவே பெருமாள்முனமே வரவேதடையேனினமே
மருவேகமழனபார்வதி மடிமீதுறு சிறுபாலகமநதி
ராதிபன்

(ஸ்ரீ ராமபாதமா என்ற மெட்டு)

ராகம் அமிர்தவாகினி தாளம் ஆதி.

பல்லவி

வாவடிவேலவா நீயென்னையாளவா
வரைராஜன்போரா மயில்மிசையென திடம் (வா)

அநுபல்லவி

பார்வதி தனயா என்மனமிலையா
பாரிலுற்ற மாதவக்கு காவுனக்கோர்மலையா (வா)

சரணம்

பூம்பழனிப்பதியே
புகழும் தயாநிதியே
புலியினர்தொழுமுந்தன்
கமலப்பாதம் கெதியே

தேன்கழுகாசலா திகழ் விருத்தாசலா
செப்பிடுந்தமிட் பெருமாள் நற்பதக்கிருபாகரா (வா)

(தந்தானதிதானதனுதன மென்றுடும் மெட்டு)

ராகம் அடாணு தாளம் ஆதி.

கண்ணிகள்

செந்தூரின்பாவடிவேலனே
வந்தாளும் பார்வதிபாலனே
சித்தசனுர் மைத்துண னே சித்தா வாமருள்கர்த்தாஜெக
மகிழத்தா
தகிடதகதிமி ததிங்கிணத்தோம் தக ததிங்கிணத்தோம் தக
திக ததிங்கிணத்தோம் (செந்)

கிழக்கோலத்தடி நடையொடுகிளைப்
புன்கானிற்குறவனிதையினுளங்
கிரஹித்தே—மனம்வைத்தே—கெஞ்சியவள்மயலது மிஞ்சி
கயமுகவனுல்கொஞ்சி
தரிகிடதக தத்திங்கிணத்தோம் தகஜெணு தக தத்தித்திமி
ததிங்கிணத்தோம் (செ)

சந்தம் பொங்குஞ்சரமழை யென
சிந்துந்தங்கும் பழனியில்வளர்
சண்முகனே—புண்யவனே தாமதமேனப்பா திருமுருகப்பா
விடி பெருமாள் நட்பா தகஜெணு தரிகிடதா-தகிடதா
ததிங்கிணத்தோம் (செ)

(சேவலாளிதேவருஜன் என்ற மெட்டு)

பார்ஸி கண்ணிகள் தாளம் ஆதி

1. சாமவேத ஞானதண்டபாணி யென்சகாயனும்
தருந்திர வுதாரனும் சிறந்தபொன்சொரூபனும்
நேமயோக வீரனும் நேசரினனு கூலனும்
நீதநாதனும் ஜனனு கூலனே நமோ நமோ

2. காலனைக்காலாலுதைத்த கர்த்தனருள் பாலனும்
கதிர்முருகவேலனும் கடாக்ஷமந்திரமூலனும்
ஆலவாய்ச்சடாதரி யகமகிழ் சு சீலனும்
ஆதிநாரணன்மருக ஜோதியே நமோ நமோ

3. புலவர்தினமும் பாதநடினம் புரியுமுந்தன் பாக்கியமே
புகழ்பெரும் ஆரோக்யமே பூம்பாதமென்சிலாக்யமே
திலகபழனியூரனும் தேஜோன்மய விலாசனும்
சித்தர்முத்தர் பக்தர்போற்றும் சேவலாநமோ நமோ

4. நலவினோத மதுரமலி பொன் நாச்சிமுத்தின்சீஷனும்
நவில்பெருமாள்போற்றிடும் அருமுக வுல்லாசனும்
தலம்மகிழ் விசுவாசனும் தயாபரசபாஜனும்
தாரகாமயூரமேறும் வேலகா நமோ நமோ

ஸ்ரீராகம் பல்லவி தாளம் ஆதி

பாலாபிஷேகமுருகன் பாக்ய ஸ்லாக்யன்
பரிமள பொழில்கிரை வரையுறும் (பா)

சரணம்

மேலோர் துதி கொளும்மாமயில் வீரன்
விதரண ஜெயதிடநடனவுதாரன்
நாலாமறைமொழி நவிலுபகாரன்
நலத்துடனே—மலைப்பழனி—ஸ்தலத்திலுறுசிவக்குமா (பா)

பாவலர் மெச்சிடும் பக்தி விசேஷன்
பரமனி னரும் புதல்வனையொரு
சரவணையதிலருள் பரவிய
நாவலர் புகழ்சொலும்லக்ஷ்மிவிலாசன்
நறுமாமலர் மணமேவிய
பெருமாள் துதி குக நாயகன் (பா)

(முகத்துக்கஞ்சிமுறமை மெட்டு)

ராகம் செஞ்சுருட்டி பல்லவி. தாளம் ஆதி

சரவணபவக்குமரக்கந்தசாமி சுப்பிரமண்யா

சாணம்

குாவர்மகளிர்மருவும் அமர குழந்தைலா வண்யா நான்
கூவினேனேபுண்யா யெனை யாள்விவேககண்யா திருக்
கூத்தாடி மைந்தனே கார்த்தாளுமெந்தனை
மூர்த்தியாய்வந்தோனே மூஷிகன்சொந்தனே

பல்லவி

பிரணமுரை யனுதினமென திடமுரைவடிவேலா

சரணம்

பெருமாள்பண்பதப்பிழையது பொருத்தருள் தருங்கணேலா
பேசரிதாகிய கோலா கல—வாசவனே மரைமூலா நல
தேனும்பஞ்சாமிர்தம்பாலபிஷேகம்
செய்திடவே வருவார்களனேகம் (சரவண)

(தெளிந்தமேலவர் என்ற மெட்டு பின்வேறு)

ராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

பல்லவி

சுகந்தமாமணமிகுபுஜபலமுள தேவா செந்தூரில்வளர்
சுப்பிரமண்யக்கடவுளே. குஞ்சரிவள்ளிபாகா
பக்தர்க்கருளும்தெய்வமே

அ சந்தம்

1. சுடர்நவமணி யருமுடி தனி லொளிபரவிடு நயசுபகா (சுப்பி)
2. சூரருடலொடிபட மனமகிழ்வொடுவயி லருவிடுமாஹரா
சரவணபவனெனும் (சுப்பிர)

3. சுத்தமனத்தொடு நித்தமுனைத்தெரி சித்தமகத்துவ
முத்தியை நத்தினேன் (சுப்பிர)

4. சுகுணவாசா சுபவிலாசா துரையுலாசா அமிர்தநேசா (சுப்பி)

(சரணம்)

மிகுந்துலாவிடும் மாமயில்மேல்நட
மிடுங்குமாரசுவா மியுனைத்தினம்
பணிந்திடும் பெருமாளுனையன்பொடு
பதமலாடி தொழ வாமது தாதா
சரவணையதிலுறு மருமுகவேதா
பிரணவமுறைசொலுமொருகுருநாதா
பித்தன்புத்திர னைத்தைக்கொம்பனின்
சத்பச்சோதா பக்திக்காதா (தேவாசெந்தூரில்வளர் சுப்)

ராகம் காகரப்பிரியா சங்கல்ப்பமே மெட்டு தாளம் ஆதி

பல்லவி

கந்தப்பனே கடம்பா பரன்சேய்
கரிமா முகவ னெருசோதராவா [கந்]

அநுபல்லவி

மைந்தன் மேலிவ்வாதா வன்மமேனுன் சூதா
சிந்தித்தேநற்போதா தென்பழனி நாதா [கந்]

சரணம்

கானமயில்மேலா ரோகணங்கொண்டாடும்
கர்த்தனே யெனக்கோர்விற்பனமே நீ டும்
ஞானமார்க்கமோது நற்பலனே கூ டும்
நாவலன் பெருமாள்கீத மாலை சூ டும்

(புதுமைச்சித்திரப்பதுமை மெட்டு)

ராகம் செஞ்சுருட்டி தாளம் ஏகம்

1. சரவணபவா குறமகள் கணவா—தெய்வகுஞ்சரி
தழுவுமற்புதமுருகனே யெதிர்வா—யென்
சரணம்மெச்சியுன் பிரணவப்பொருள்
தருமலங்கிர்த சத்தியின்பாலா

2. பிரையணிய ஞர்க்குபதேசா—மயூரமேரித்
தரையொருநொடிவருகுமரேசா—பரி
பூரணப்பொருளே யுனேத்தின
மாவலாய்ப்பணி—வோடுநத்தினேன்

3. விருப்பமுற்றசெந்திருப்பரங்கிரியா—கேளாதவர்போல்
இருப்பதுமழகோயிது சரியா—அதி
வீரமத்தக மாமுகத்துணே
வாயெனக்கொரு நற்பதமீய

4. தருண முன்மனக்கருணைபின்சதமே—பாவலர்வாழ்த்துத்
தருமகத்துவப்பெருமாளின் பதமே—பரிடித்
தஞ்சமுந்தனேக் கெஞ்சியேதினம்
அஞ்சலித்திடும் பஞ்சை யைக்காரும் (சர)

ஐமோரா ரஸ்கசிஞ மெட்டு

ராகம் இந்துஸ்தான்பியாகு தாளம் ஏகம்

பல்லவி

வண்ணமா மயிலேரிவா மணிவடி வேலா வேலா வேலா வேலா

சரணம்.

விண்ணவர்தொழுங்குமார
மேதினியோர் போற்றமார
வேடக்குறச்சிறுமி வித்தகலோலா லோலா லோலா லோலா

பண்டாரப் பேரிலங்கும்
பாரைமதிலேரி யெங்கும்
பார்த்தரசாக்ஷிகொண்டாய் பார்வதி பாலா பாலா பாலா பாலா
தெண்டாயுதத்திருநாள்
கொண்டாடுநற்பெருமாள்
விண்டேயுனைத்துதித்தேன் விற்பன மூலா மூலா மூலா மூலா

மீனாக்ஷி மதுரராணி மீனாக்ஷி மெட்டு.

ராகம் பியாகு தாளம் ஆதி

வேலனே உமைமகிழ் பாலனே அதி
விரைவுட னுனதிட வரமருள் திருவடி (வே)

சரணம்

புள்ளிக்கலாபமேறிப்புரமெங்கும் நடித்தாய்
புல்லரைச் சிதையுறப்புரட்டியே மடித்தாய்
வள்ளிக்குளங்கசிய வந்துமே படித்தாய்
வனத்திற்கிழவனென க்ஷணத்தில்கைபிடித்தாய் (வே)

அரவணிபரமனின் அருள்சுதவாசா
அரியமுனிவர்க்குப தேசவிசேஷா
சரவணபவா முரஹரி மகிழ்நேசா
சாற்றும்பெருமாள் கவிஎற்கும் பிரகாசா (வே)

ஸ்ரீ ராகவா மாதவா மெட்டு

ராகம் இந்துஸ்தான் பியாகு தாளம் சாப்பு யோகம்

மேலாம்பழனியில் மேவுங்குருபா
வேல்முருகன் பாதமேதுணையே
நாலாம்பதவி யென்னுளுந்தருங்குக
நாதன்றனைப் பணிவாயினியே

தொகையறா

நாரணன்மருகனே நலமவுனநாதனே நடனமயிலேருசமுகா
கவில்கருணையெனது துயாலுயணிவீரனே நாரியிருமாதுகணவா

பாட்டு

நறுமலர் சொரிகரு மொருபாக்கிரியான்
தரையுளர் மகிழ்வுறும் சதுர்மறைத்துஞ்சயான்
நற்றமிழ்வித்வம்கும் பெருமான்தொழும்
அத்தனளித்த ஆறுமுகனும் (வே)

கோபால சோதரி கௌரிமேட்டு

ராகம் பைரவி தாளம் ஆதி

மாவேலவா சிவசுதா பக்தி
தாவோ காவா துயைசெய்நீதா தருணமுதவு

பல்லவி

ஸ்ரீராகவன் மருகசுமுககுகா நாளும்
சேவித்தேனாறுமுகா சித்தாந்தா மெச்சும் (மா)

சரணம்

விந்தாகிரிப்பழனிக் கந்தாமருக்கமழும்
செந்தாமரைக்க மலந்தந்தாளண்ணமலையின்
சிந்தானந்தா சீர்காவடிக்குகந்த (சிந்தா) அதி
செப்பிடும் பெருமான்முனம் சேவைதந்திடு
தினமருள் கொடு (மா)

கிளிகள் காடை என்ற வண்ணச்சந்தமெட்டு

ராகம் தேசிகம் தாளம் ஏகம்

1. வனிதைமார்களிருவரோடு மருவிவாழும் முருகவேலு
மயிலிலேறி யெனது நேரில் வந்தா ளெந்தாய் கானில்
தினையின்மாவினுணவை மேவுங்கந்தா சொந்தா நாளும்

2. வளரும் மகிழுயிரவியொளிபோ லுலகமுழுதும் பரவும் பழனி
வரையிலுவை மகிபனேசிறந்தானந்தா யெந்தன்
கவலையகல யினியபுத்ரசந்தானந்தா தேவி (வனி)

3. வரமருளுபகாரவீர திருவருமுகனேயுதார
மதகரிதுணைவாவினோத மூலா வேலா நீல
முரஹரி மருகாபாவி பாலா லோலா மேலவ்

4. வானத்தோரின் சேனைக்காவ லாசித்தாமெஞ்ஞானத்தேவா
மாகற்பூரதீபச்சோதி நாதாவேதா யேழை
மேவிக்கோபமேனப்பாதங் தாதா நீதா தேவி (வனி)

5. வருமவுணர்களுடலொடிபட விரைவினிலுனதொளிரயில்விடு
மரகதமணிமுடிபுனையுமுல்லாசாநேசா யெந்த
னிருதயமதில்நடமிடுகுமரேசா வாசா மலே

6. வனமதில்வந்தொரு குறமகளின்பரண்
அருகிலிருந்துனதிட பலவிந்தைகள்
வாதித்தேசற்றேயக்கானில் பாவைக்கானேப்பேராக்கூவிக்
கொண்டாய் பெண்டாய்—யென்பால்
வாதாகனமகிழேதர வருவாயிது தகியேதின
முனையேதுதி பெருமாள் முறைகண்டாய் கண்டாய்-சிவ
னிடம்மறை
விண்டாய் விண்டாய்
வஞ்சமுமேன் பஞ்சையெனேவந்துகாவா (வனி)

(அருமை மருவும் மாமா என்ற மெட்டு)

ராகம் சுருட்டி — தாளம் ஏகம்

கழுகுமாமலை யூராகிருக்குமழகனே கலைவீரா—தினம்
ககனத்தேவர் தொழும்வித்தார மவுனத்தேசிகனுமுத்தாரன் (க)

தொகையரா

காரணகவியுகவினோதா முன்னருணகிரி கல்விக்குகந்தநேசா
பூரணசீர்வாதமே சொலவேனோரில்வா புண்யாசயம்பிரகாசா

பாட்டு

பார்வதியருள்பாலா நல கூர்மணிவடிவேலா—தென்
பழனிப்பதியின் வரைநின்றுலவும் குமரக்கடவுள் விமலத்துரையெம்

தொகையரு (க)

பாரிய சூரருடல் வீழவதைசெய்தவா பத்தாகஷ்க குணளா
படபடெனசிறையினடி படுசிகியில் நடனமிடு பாவையிருபேர்மணாளா

பாட்டு

பக்தியளித்திடும் தாதா—வுன் சித்தமுமிப்படி வாதா
பாவலன் பெருமாள் பணிந்திடும் சாமிவேல்முருகா மகிழ்ந்தருள் (க)

புதிய பியாண்டு மெட்டு

(ராகம்கீர்வாணி)

செந்தூர்வாசா யெந்தன்நேசா
சிவனருள் சரவணபவ னெனவந்தயிசா
சித்திக்கும் லோலா சத்திக்கைவேலா
எத்திக்கும் புகழ்பரவிய குமரகுகா—மரகதமயில்
மிசைமருவிய (௨)

(தோகையரா)

தென்பழனியூரனே தேவானுகூலனே
தெவிட்டாத அமுதமே

(சரணத்தொடர்)

ஆதரவாரிணியுனதிரு பதமலரடி துதிபுரியவு மருள்தருகுவையே
அகிலம்புகழ–பெருமாள்கவி–பதுமுன்னுற–மகிழ்தந்திடு (செந்தூர்)

(பவணகிரி யதிலுரைசெய் மெட்டு)

ராகம் இந்துகிதான்தோடி தாளம் ஆதி

பல்லவி.

குமரக்குகா பரமசுதா குருநாதா கருணைபுரி (குருநாதா)

அநுபல்லவி

அமரசகா பமுதசுகா அண்டலை க்கொடி
பூண்டநன்மணி க் (குருநாதா)

1. கோவிந்தமால் மருகா நீவந்தாள்வேல்முருகா
2. குணமும்மணமும் பரவும் குறமகளுடனிதமுலவிடும் (கு)

(தொகையறா)

குயில்காடை மாடப்புரா வினங்கூவிடும்
குன்றுதோராடும் மூலா
மயில்வாகனு பிரமனைச்சிறையிலிட்டவா
மாகவுரி பெற்ற பாலா

சரணம் (சாப்பு)

மகிமைக்கடலெனுமற்புத மிகு சித்திரயோகா
சுகமுற்றிடவாமித்தகி யருள் தர்ப்பர யேகா
மதுரத்தமிழ்சொலுநற்பெருமாளுக்கொருதாதா
வனிதைக்கொரு—வளையல்த்தொட
வருமுத்தம சுமுகத்திட (குருநாதா)

(பஞ்சணையேரிப்பழகாய் மெட்டு)

ராகம் தேசிகபியாக் தாளம் ஏகம்

பல்லவி

அந்தரி பால அயிலா ஓம்
ஆறாறாசிவ நடனமயிலா (அந்த)

அநுபல்லவி சந்தம்

1. சுந்திரவிற்பனனே நல
நுடியிடை யிருவனிதையர் மகிழ் (சுந்திர)
2. சுரர்பணியருமுக சரவண (சுந்திர)
3. சூர்க்கெகிர் வீரிட்டயிலே விட்டுயிர் மாளப்புரி (சுந்தி

சரணம் (சாப்பு)

சோலைப்பழனிப்பதியலங்கார
தோகைச்சிகிமேலுலாவுமொய்யாராவுன்
காலைப்பணியுமிவ்வேழையென்னோய்
காக்ஷியுடன் பெருமாக்ஷியுந்தாராய்
கந்தகடம்பவனே—தி— காவியவான்பெருமாள் தினம்
போற்றிடும் (கந்த)
2. மத கரியுரிபானருள் குருபர (கந்த)
3 தினைக் கானிற் கிழ வேடத்துடனேயுற்றிடு மாவுத்தம (கந்த)
யெனைக்—கா—வா—கமழ் பாவிடும் (அந்தரிபால அயிலா)

(பரப்பிரமவேலா என்ற மெட்டு)

ராகம் பியாக் பல்லவி தாளம் ஆதி

திருத்தணிவேலா தேவிபார்பதி பாலா

அனுபல்லவி

வருத்தமகற்றும் மூலா வள்ளிமணாளா (திரு)

தொகையரா

சரவணையில்ருசிரிய குழவியுரு வானவா
சண்முகானந்தகுகனே
அருணகிரி மனமகிழ அரியதமிழ்தந்தவா
அரவணிந்தோனின்மகனே

சரணம்

கருணைப்பிரபல முருகேசா
கமழ்தங்கிடும் பழனியில்வாசா
கார்யவிசேசா — திட
காவியவான்பெருமாள் நினம்போற்றிடும் (திரு)

(தசரத ராஜகுமாரா என்ற மெட்டு)

ராகம் இந்துஸ்தான் தோடி (பல்லவி) தாளம் ஆதி

பசுபதி யோனருள் பாலா வடி வேலா மனோ லோலா
ஜெய லோலா

சரணம்

கஜமுகனுக்கிளைய வேலவ்காரா
கானமயில்நடன மாடும் கம்பீரா
திசைபுகழும் பழனிகிரியுரைவீரா
சேவற்கொடிபிடித்த சிற்பர பெந்தினைச்சதார்கொரும்
பொற்பாதா நற்போதா (பசு)

கொடி பல்லவி

தேவர்குறை தவிர்த்ததிருவே யருள் தாவே வருங்குருவே
கமழ்தருவே

சரணம்

மேவியும் பாப்பணியும் கருணைப்பிரகாசா
விமலனுககுருபரனைவ மொழிந்த வுல்லாசா
பாவலனும்பெருமாள் காவியநேசா
பாவைகுஞ்சரிவள்ளி சேர்ந்தா சிவகந்தா நற்சுகந்தா
பிரபந்தா (பசு)

(சங்கந்துலங்குஞ்சரா மெட்டு)

ராகம் பைரவி — பல்லவி — தாளம் ஆதி

செந்தூரிடங்கொண்டவா—செழித்திடுஞ் (செ)

அநுபல்லவி சந்தம்

1. தேவாதி தேவாச தாவாசிந் திசைபாரவிடுந்திருச் (செ)
2. சிந்தாகூ லந்திர்சு கந்தாசந் தனைமணங்கமழ்திருச் (செ)
3. சீர்வடிவேலவனே குறமாதும—ணளசிகாமணி
யேவரதாதிருச் (செ)
4. கிறைபடபடவென நடமிடுகிடமயி
லுறுமரஹரசிவ சரவணபவதிருச் (செ)

சரணம்

சுந்தரமறைப்பொருளே
யுந்தனெனக்கருளே
கான்மேவிக்—கிழவுருவுடனை
தேன்மாவைப்—பருகியகுகாதிருச் (செ)
பக்தர் மகிழ்நேசன்
பண்பெருமாள் தாசன்
பாடுஞ்சண்—முககுழகனே அயி
லோடென்கண்—முனநின்றுதரிசனைதருஞ் (செ)

அம்பிகைபாலனே என்ற மெட்டு.

ராகம் கரகரப்பிரியை தாளம் ஏகம்

பல்லவி

கங்காளன்பாலனே மங்களவேலனே
கா வா, நீ, கா வா, அருள்தா வா (கங்)

அநுபல்லவி

எங்குங்கீர்த்தி தங்கும்மூர்த்தி யுந்தன்சீர்த்தி
எண்டிசையோர் சந்ததமும் பணிந்திடமுத்தி யீகுவாய்

தொகையரு

திடமுடையசூரர்களை யொருவேலினால்வென்ற
தேவமெஞ்ஞான குருவே
நடனமிடுகலபமயிலாரோ கணங்கொண்ட
நாதாவே னேரில்வரவே

சரணம்

சீர்சிறந்தவானவர் சிறைதவிர்க்க வந்தவா
செப்பிடுங்கவிப்பெருமாள் செந்தமிழ்க்குகந்தவா (கங்கா)

ராகம் நாட்டைக்குறிஞ்சி தாளம் ஆதி

பல்லவி

காளைவாகனன்பாலனே சாமி
கருணைதா கிரமிதா சாமி (கா)

அனுபல்லவி

வேளையே மயிலேரிவாவடி
வேலாஞானமறைமூலா ஜாலமென (கா

சரணம்

பூமலர்பொழியும் கான்வளர்பழனி
மாமலைமுருக வரதினமுமுனை

நேமமொடுபணிவோர் கவலையற
நீதாவேதகுருநாதாபாதமேதா (கா)
வாருதி துயிலும் மால்மருககும
ராசரவணபவா வரதகுகா
கோரிடும்பெருமாள் சாமிதமிழ்க்கனு
கூலாவள்ளிகுஞ்சரிலோலா வந்தருள்புரி (கா)

காக்ஷிகண்காக்ஷியே என்ற மெட்டு.

ராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் ஆதி

பல்லவி

பழனிமகத்துவம்—பகர யாரால்முடியும் (பழ)

அநுபல்லவி

கழனிசிறந்திலங்கும் காவிரியோவென நீர்வளமேவிய (பழ

சரணம்

சிந்தனைவைகாபுரியைச் செப்பிடவுத்தேசமே
செந்தளிர்நிறைந்ததரு வின்கனியின்வாசமே
மந்தமாருதம்பல மலர்தருஞ்சந்தோஷமே
மாகமுகாம்பைதென்னை மாசிலாப்பிரகாசமே
மட்டில்லாச்சரவணையின்மாக்ஷி—யிந்த
மானிலத்திலேதிதுபோல்காக்ஷி—நம்
சட்டியடியார்கட்டிய சூக்ஷி—முனம்
தந்திருப்பான்கந்தனேகடாக்ஷி

தங்குந்திரு வாவி
னங்குடியின்கோவி
லின்கனகத் தூவி
செம்பொனொளிதாவி (பழனி)

தந்திமுகனாலயந்தனிற்கற்பூர ஜோதியே
சாரமுருகேசனின்தடவரையின் கியாதியே
பந்தியாகசந்ததம் பஜனைகீதம் ஓதியே
பாரமணிக்கோபுரவ லங்காரநன் நீதியே
பார்த்திடக்கண்கூசுமிதின்ஜோக்கு—வேலன்
க்ஷேத்திரத்தின்வாசலதுமேற்கு —மேள
வாத்தியசங்குத்தொனியெல்லோற்கு-சிவத்
தோத்திரமெஞ்ஞானமேயுண்டாக்கும்

மதுரகவிராஜர்
மகிழ்பெருமாள்தாசன்
நிதம்பணியுல்லாசன்
நிருமலவிலாசன் (பழ)

திருப்புகழ்சந்தம்

(தானதனத்தத்தானதனந்தம்)

சீர்வளர் தங்கக்காவடியுங்கண்
காணமுழங்கும் பேரிகையுஞ்சங்
கீதமிலங்கும் மாமலைமேலுறு செங்கைவேலா
தேவரிடும்பன் ஞானிகளும்பர்
மேதினிதங்கும் மானிடருந்தன்
சேவடியின்பங்கோரிடுவார் பரை மங்கைபாலா
ஆருமுகப்பண்டார கடம்பன்
ஆதிசிவத்தன் பூரணமைந்தன்
ஆனைமுகத்தன் சோதரனுகிய தண்டைப்பாதா
ஆரணநற்றெண்டாயுத கந்தன்
காரணசித்தன் ஓர்மருகன்பொன்
ஆபரணப்பெண்ணுளிருவோர்மகிழ் கொண்டபோதா)

9/3
12.2.43

(தானதனந்தன தானதனந்தன)

வானளவுந்திரு மாமதிலுஞ்ஜெக
ஜோதிமிகுந்திடு கோபுரமும்பெரு
வாரிநிறைந்தக லாபகடம்புரியுங் குன்றாரா
மாருதமுங்கமழ்வாடை திமிர்ந்துள
கோவிலுராஞ்சிதமே திகழுங்கவி
மாலைதரும்பெருமாள் பணியுங்குக மந்திரவீரா

ஸ்ரீ நாராயணன் தோத்திரக் கீதங்கள்.

(வேலா நீயே கெதியென்ற மெட்டு) சரணம் வேறு

ராகம், பியாகு [கல்யாணியிலும் பாடலாம்.] [தாளம் ரூபகம்

பல்லவி

சீதாராகவனே சேவைதாதா சிறியவனிடம் மனமகிழ்வொடு (சீ)

சரணம்

ஆதவன்மரபா விநோதா
ஐயனேயெனையாளவுரதா
அடிமையென்னொருமிடியகன்றிட
கொடியினில் வருந்துடியிடையனைச் (சீதா)
மாதவற்கனுகூலாவீரா
மாதுகவுசலைமகிழ்குமாரா
மரவுரியுடனொரு வனந்தனில்
வருகபிகுல அநுமன்போற்றிடும் (சீதா)

பாவலநாச்சிமுத்து சிஷன்
பண்கவிப்பெருமாள் விசேஷன்
பணிரெகுபதி குணதயாநிதி
பதமலர்கெதி யருள்வரயேதகி (சீதா)

அம்பாள்சவுடநாயகி என்ற மெட்டு

ராகம் பியாகு — தாளம் ஆதி

பல்லவி

கண்ணெ கார்மேகவண்ணனே—நின்
கருணைபுரியவிது ததிவருமெனதிடம் (க)

சரணம் (ராமாவதாரம்)

அன்னாளில்தவமுனிஜெபங் காத்தாய்
அருகினில்தாடகைமடியநீ பார்த்தாய்
பெண்ணைமகலிகைசாபமே தீர்த்தாய்
பெருவில்லொடித்துச்சீதை மாதையம்மிதிலையில்
திருமணமதுசெய்த ஜெயாகுபதியெனும் (கண்)

ஆயர்கள்பாடியிலுன்விளை யாட்டை
ஆரார்வார்களதேவிபருந் தேட்டை
தாயடித்திடப்பயந்தொருகுரல்போட்டே நீ.
தக்கவாய்திறக்கவுமித்திக்கெலாம
தற்குளே யிருக்குதுமெனச்சொலிய (கண்)

உரியில்வெண்ணையை யெடுத்தோட்டமே பிடித்தாய்
ஓடியவர்வரவும் ஆனைமடி படுத்தாய்
தயிரியமுடன் பால்தயிரையுங் குடித்தாய்
தருமவேதா சரணமேகா
கருணைமேவா கிருபைநாதா (கண்)

அரிஹரி யெனத்தொழும் அடியாரைப் பாரும்
அரிபஜனைபுரியும் அன்பரைக் காரும்
கரிமுன் வந்திடும்முராஹரியே நீ வாரும்
கற்பனைத்தமிழ்ப் பெருமாளைப்புத்
கவிக்குணத்து பொற்பாதத் துணைதாவும் (அரி)
(சாமீஜுஷிதாளணைய என்ற மெட்டு)

ராகம் மத்யாவதி தாளம் ஆதி

பல்லவி

சீதாபிராமஜெய தீர விநோதா

அனுபல்லவி

ஆதாரமான பெருநாதா வேதா திருவருள்புரி (சீதா)

சரணம்

வந்தாள் சந்ததமரிஹரிகோ
விந்தா சுந்திரமுகில்வண்ணா
தந்தா செந்தமிழுணர்பெருமாள்
சிந்தாகூலந்தீர்த்திடுவாய்
திருமிதிலைப்புரி—ஜனகசுபுத்திரி (சீதா)

வாவடிவேலவா என்றமெட்டு

ராகம் அமிர்தவாஹினி தாளம்—ஆதி

பல்லவி

ஸ்ரீராமநாதனே சீதாசமேதனே
தேவா துணைதாவா (ஸ்ரீ)

அனுபல்லவி

மாரவேளின்பிதா மணிமிகளசலிசுதா
மானவீடணர்பணியும் கானலோல ரஞ்சிதா (ஸ்ரீ)

சரணம்

தேவர்கள்முறையே தீர்க்கவந்தனையே
தெரிசிக்குமடியார்க்குன் சேவைதந்தனையே
பூவலமாதவா புனிதரி ராகவா
போற்றிடும்பெருமாள் தயாரற்றவேரோராகவா (ஸ்ரீ

ராஜவிசுவாசலாலா என்றமெட்டு

ராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி

பல்லவி

எழுமலைவாழ்கோவிந்தா எனையாள்நந்தா—னந்தா (எழு)

அனுபல்லவி

நாளுமுன்சேவைதாதா நம்புமேழைமேல்வாதா
நாரணனேவினோதா நவமணி யணிபுய திருமகள் வளர்ஜெய

தொகையரு

ஜெகமீதிலுனையன்றி வேருதவியாருமில்லை
தேசோபகாரமணியே
தினமுமுன்னிருபாத கமலமலர்தருநீத
திருப்பதிக்குற்றவணியே

சரணம்

செந்துளபத்தணி பூண்டவினோதா
சந்ததமெந்தனை யாண்டருள் நாதா
மைந்தன்பெருமாள்முனம வாமுகுந்தா நந்தா (வா)

ராகம் தேசிகம் பர்மா டியூன் மெட்டு.

அரி கோவிந்தா நலவைகுந்தா
அமலா நன்னீ தா
அழியோர் காபாகா யசோதையின் பாலா
ஆளாய் மலர்த்தாளாய் வந் தாளாய் மலர்த்தாளாய்
அவலுடன் கூவினேனே தேவா வாந்தாவா யெனைக்காவா

கரிமுரையிடவொருமடு வினிலதனுயிர்
கார்த்த பொற்பாதா
காவா செந்தமிழ்ப்பெருமாள்மொழிகாதில் விழாதா
காரணாபரிபூரணா கவி காரணா பரிபூரணா
கமலப்பாதமேதெரிசித்தேனெனை யாளுமேயெந்தநாளுமே
கண்ணால் பாருமே (அரி)

ராகம் மத்தியாவதி பல்லவி தாளம் ஆதி

நாராயணக்கடவுளே நம்பினேனே அரி (நா)

அனுபல்லவி

காராளைமுன்னடுத்துன் ஓராயுதம்விடுத்து
சீராய்க்கரவையிரு கூராய்ப்பிளந்தஸ்ரீமன் (நா)

சரணம்

1. நாடியர்ச்சுனசாரதியானவு
தாரணப்பொருளேவடிவாகிய
வீரலக்ஷணமே மிகுராமாவ
தாரவுத்தமனே பரிபூரண (நா)

2. நாதசுந்தரனாருந்தவ
வாரணன் துணையானகந்தனின்
மாமனுந்தனையே மனந்தனி
லேநினைந்தனையே யோர்வரந்தரும் (நா)

3. நானிலமீதினிலே யொருபாவியு
மாகியாராவணனோடவன்சேனைமு
னேகியரக்கரையே வதைசெய்தொரு
வீடணருக்குலங்காபுரிதந்தரி (நா)

4. நற்றமிழ்வித்வ மிருங்குருநாச்சி
முத்துபதந் தெரிசித்தொருமாக்ஷி
யுற்றகவிப்பெருமாள்க்குன்கடாக்ஷி
ஒருவரமொடு தெரிசனைகொடு
நிதமெனதிட மனமதிலிரு (நா)

காஜிரேகஞ்சேஜபாபே என்ற மெட்டு

ராகம்: பியாகு தாளம்: ஆதி

பல்லவி

சீதாராமஸ்ரீ கோபாலா
சேவைதாதே வாகிதேவா

சரணம்.

மாதவா கோவிந்த நாமா
வாரியிலதுயின்ற பூமா
தீதகற்றும் பாதபத்ம சேவைதாதே—வாகிதேவா (சீத)

கோபியர் சல்லாப தீரா
கோகனப்பாதா வித்தாரா
தேவகிபுத்ரா வுதாரா சேவைதாதே—வாகிதேவா (சீத)

சந்ததங்கண் பார்முகுந்தா
சாமளதே காவைகுந்தா
மைந்தன் பெருமாள்க் குகந்தா சேவைதாதே—வாகிதேவா(சீ

வனசாக்ஷி என்ற மெட்டு

ராகம்: வராளி பல்லவி தாளம்: ஆதி

பகவானே பதிகுசவ வலசு (பகவானே)

அநுபல்லவி

1. பண்பொடு கும்பிடு மன்பர்கள் நம்பிய (பகவானே)
2. பாதத் துணை தரு மேயற்புத மிகும் (பகவானே)
3. பக்ஷமனத்தொடு நித்தமு னைத்தெரி
சித்து மகத்துவ முத்தியை நத்தினேன் (பகவானே)
4. பலசம் பவமொடு திடகொடு முடிநீர்க்
கலசந் தடபுட லொடுவரு வதுசீர் (பகவானே)

சரணம்.

ககனமதிரவரும் காவடிக்கூட்டம்
காணவரு மனிதர் திரளுமெதேஷ்டம்
அகமகிழ்வுடனுன தடியார் கொண்டாட்டம்.
அலங்கிர்தமே யிலங்குமிஜய
நலங்கருணை தருஞ்சுமுக (பகவானே)
நாவலர் மகிழுலெக்ஷ்மி நாடகவிலாசன்
நற்றமிழ்க்காதார நாச்சிமுத்து வெம்பிரகாசன்
சீட்னென வந்தாஞ்சி தப்பெருமாள் தாசன்
சேவித்திட வேவாத்தையருள்
ஜெகத்திலதி மகத்வ மிகும் (பகவானே)

வாருங்காணேன்துரையே என்ற பியாண்டு மெட்டு

ராகம்: இந்துஸ்தான் பியாக். தாளம்: ரூபகம்

பல்லவி

கோவிந்தா குணமதுரித னேவிந்தா தினமுனதிரு
பாதந்தாதிருடி தொழுதேன்—அடியவன் மிடியகல் (கோ)

அ. சந்தம்

1. குத்திய ளந்திடு வுத்தம (கோ)
2 குமரிசோதரா தயாடீரா கிர்பாகரா வீரா ரா (கோ)
3. கும்பக்கரி துயர்தீர்த்திடு மம்பொற்புயா வெனைக்கார்த்திடு ( )
4. குறவுள பாவையி விதுதநி வாவெனதடை யகமகிழ்வெ.டு ( )

சரணம்.

பாவியும கிய தாடகை மாதினை யெடனூர் போக்கி
பாமா ராவணனுடைவன் சேனையுமடியத் தாக்கி
பூமணி மானுடனே போயாசே கொண்டவனீ
புவனம்புகழ் சுபாஞ்சித
கவிதன்திட பெருமாள் தொழும் (கோ)

ராம நாமமே என்ற மெட்டு.

ராகம்: கேதாரகௌளம். தாளம்: ரூபகம்

பல்லவி

காரணவதாரமான கண்ணனே புண்யா
கருணையே தருநய (கா)

அநுபல்லவி

வாரண முறைதவிர்க்க வந்தநா ளின்பமாய்
வலிகாவதைபுரி (கா)

சரணம்

மாதொரு தேவகி மைந்தனுய்ப் பிறந்து
மன்னியசோதை மனைதனில் வளர்ந்து
பூதகி பாலுண்ண வேமன மகிழ்ந்த
பூரணா—கோரினேன்—பொலிவாமருள் திருக் (கா)

ஆயர்கள்பாடியில் வெண்ணெயுண்டோடி
அங்கொரு காளிங்கன் வால்பிடித்தாடி
தூயவனிதையர் பாலுா வா டி
சுகித்தவா—ஜெகத்துளோர்—துதிகொளுமணிவண ()
அக்கிரமகம்சனி ஞருயிர் வாட்டி
அன்புறு தேவர்களின்சிறை மீட்டி
மைக்குழல் ருக்மணி மாலையை சூட்டி
மற்றவோர்—சத்யபாமைக்கிளி மருவிய (கா)
சாரமிகும்பதித் துவாரகை மேலா
சந்ததமும் பெருமாள்க ஜனுகூலா
பாரதபோரில்நீ சாதியாகப்
பார்த்திபன்—போற்றிடும்—பண்புறு ரஞ்சித (கா)

பராபரஸ்துதி

(சரி சரி சாமுத்திரி என்ற மெட்டு)

ராகம் இந்-பியாகு பல்லவி தாளம் ஏகம்

சிவமயம் சிவமயம் சிறுமதியணி யாணிருதயம் (சி)

அனுபல்லவி

சித்தர்முத்திபெற நத்திடுமுத்தம
சுத்தசைதன்யமாய்த் தோன்றுமமோகா (சி)

சரணம்

திடமுட னொருவனிதையைச்சடை
முடியிடுங்கன யோகனே
தேடியுன்பாதமேபணிந்திட
சேவைதந்தருளேகனே
உமை—தேவிபாகனே
எமை—யாள்விவேகனே தில்லைத்
தெருவினில்த்ததிங் கிணவெனநட
மிடுதெய்வீகனே பெருமாளுக்கருள் (சி)

தாதாபாய் என்ற மெட்டு

ராகம்: இந்துஸ்தான் தோடி. தாளம்: ஏகம்.

பல்லவி

மாதேவா சங்கரசிவ (மா)

அனுபல்லவி

மன்றாடும் பா—னென்றாருந்தொழும் (மா)

சரணம்

நிதாகுணசயா நின்மலத போதஜெயா
நினைத்துதித்திடு மன்பர் தமக்கொரு
க்ஷணத்திலுந்திர முத்தியளித்திடு (மா)

தொகையறா

பேதைமதியோனென் மனத்துயரம் நீக்கியே பேரான்மை தருதல் நன்றே
பிரமாத மிதுவெனவே நினையாமலடியேனை பேணியாண்டருளு மின்றே

சரணம்

பொங்குமுத்தமிழ் விசேஷன் புண்யநாச்சி முத்துநீஷன்
பூமணங்கமழ் பரவு நற்பெரு
மாள் கவித்துணை யான சற்குரு (மா)

வேலனே உமை மகிழ் பாலனே

ராகம்: பியாகு பல்லவி தாளம்: ஆதி

சொக்கநாதா—மதுரைவளர் சொக்கநாதா—மதுரைவளர்
சோமசுந்தரசு—கா சிறந்தசிவ (சொக்க

அநுபல்லவி

பக்கமேவும்—மலைமகள்—பக்கமேவும்—மலைமகள்
பாகனே சுகிர்த—போகனே துரை (சொக்க)

சரணம்

மா மதியருகு
மான் மழுவணியு
மா தவமுடைய
மாசிலாவரனே
மகபதியோடு சூர்ஜெகமுள முனிவர்கள்
அகமகிழ்வொடுபணி யமலநின் வரமருள்
தாரணிபுக ழு
தாரணதி வா
தாகணபதி பி
தா தருணமிது
நதியுதவிடுநதி—சாற்றிடும் பெருமான்
தமிழ்க்கொரு கருணை—யளித்திடவு நினை (சொ)

மாசி மாசி மாக்கோரே என்ற மெட்டு

இராகம்: பார்ஸி — பல்லவி — தாளம் ஆதி

மாசிவா சிவா சம்போ
வர்திப்பேனென் மீதிற்கோபம்
வையாதே தேவா—பார்ப்பதியாம்
வாலை மணாளா

சரணம்

ஆசைப்பொன் னம்பலமே
ஆடல்செய் தம்பரமே

ஆவின்மீதிலேறிடு மெங்கோனே
அத்தித்தோலாடை விநோதா
பக்தித்தேனே சடை நாதா
அன்பொடு கும்பிடு பண்பெருமாள் சங்கீதா
ஆசி—நீசொ—லேச—தா
அன்பொடுகும்பிடு பண்பெருமாள் சங்கீதா (மாசிவா)

பராசத்தி துதி.

ராகம் செஞ்சுருட்டி] இஸ்லாம் முகம்மதலி மெட்டு [தாளம் ஆதி

கண்ணிகள்.

நத்தினேனுன்னைக்கோரி கனகபாரா
சத்தியம்பிகை நாரி விஸ்தாரி
அத்தியுரி பாமனருமை மாதவியெனை
ஆண்டருள் சுகுமாரி கெம்பீரி (நத்தி)

சிங்கவாகனவாமி அரிதிருமால்
தங்கையேசிவகாமி யிப்பூமி
தங்கிடுமடியவர் துயர்பொடி படத்துணை
தந்திடும் அபிராமி யென்சாமி (நத்தி)

கந்தனுனதுசேயே கஜமுகமாய
வந்தவனையுநீயே கண்டாயே
மைந்தனெனவெனையுன்மனங்கனிந்துபாரம்மா
மலைமகளெந்தாயே வருவாயே (நத்தி)

வித்வலெக்ஷ்மிவிலாசன் மெய்யன்புநாச்சி
முத்துமெச்சிடுஞ்சி சன உல்லாசன்
பக்தர் மகிழக்கவிப் பாக்யமிகு விசேசன்
பண்பெருமாள்தாசன் நன்னேசன் (நத்தி)

வந்தே மாதரமே என்ற மெட்டு

ராகம் கல்யாணி பல்லவி தாளம் ரூபகம்

மீன லோசனியே—யிந்த
வேளையேயுன் சேவைதாரும் (மீன)

சரணம்

ஞானமாமணி சிங்காரி
நப்பினேனுனுன்னைக்கோரி
எனம்மா நீயே விஸ்தாரி
ஏழை யேனை யாள வாதா (மீன)

கந்தனென்றொரு மகனைக்கண்டாய்
கர்த்தரிடமும் பிரியங்கொண்டாய்
சந்ததங்கூடற் பதியில் நின்றாய்
தாயே நீயே சேயெனக்கருள் (மீன

நானிலம்புகழ் மதுரை ராணி
நாரணன் சோதரி கல்யாணி
பாவலன் பெருமாள்முன் பேணி
பாதந்தா சங்கீத பூரணி (மீன

ராகம் கவாய்] சங்கமுழங்கிடு மேங்கள் என்றமெட்டு. [தாளம் ஆதி

மங்களலங்கிர்த மெங்குமுழங்மீ ஞக்ஷித்தாயே யுந்தன்
செங்கமலப்பாதமுந்தநி தந்துகடாக்ஷிப்பாயே
திங்கள்துலங்கிடு சங்கரனின் பெண்டாய் வந்தாயே யெந்தன்
பங்கிலிருந்திடுமங்கை சவுந்தரியே யெந்தாயே நித்தம்

பாடிடநல்வரமேதா தென்
பாண்டிநகர்ப்பதிமாதா தூய
ரோடிடவர்துதாதா நின்
னருள்தரமன மதுவை வை (மங்)

எத்திசை யோர்களும் நத்திமகிழ்ந்திடுவார்கள்தேடி கோவில்
சுத்திவலம் புரிந்தர்ச்சனை செய்திடுவோர்கள் கோடி
முத்தமிழோதிடுவித்துவ நற்பெருமாள்பண் பாடி பரா
சத்தியெனத்துதி யொத்திடுபக்தர் மனத்தில் நாடி டரி

பூரணகௌரிகபாலி அரி
நாரணசோதர நீலி கலி
காரணமெய்த்திடுசூலி செந்
தமிழுணர்ந்திடவழி செய் செய் (மங்)

ராகப் சிந்து பைரவி] சண்முகா யேழை மெட்டு [தாளம் ரூபகம்

பல்லவி

அன்னைமீனம்பிகாவுன் அருள்புரிவாய்
ஆதரி நீயே தெரிவாயே ததியேவருவாய் (அன்)

அநுபல்லவி

1 அத்தன்மனமகிழொடு முத்தம்தருங்குணமணி (அருள்)

2 அலைகடலுலகினில் மெய்பூகென
வருகிடு சிறியவனிடமுன (அருள்)

3 அரிராகவசோதரி கிருபாகர
வரைராஜ குமாரினீ தயவுடனல (அருள்)

4 அனுதினமுறை சொலி யர்ச்சித்தோர்-பெருங்கருணை
மெச்சிப்பார்—புகழ்ந்தசிவ
சத்தித்தா-யெனுங்குமரி (அருள்)

சரணம்:

நன்னய மிகுங்கெம்பீரி கைகூத்தீபப் பக்ஷத்ரூப
நாயகி கங்காளன் பாரி
நானிலத்தி லேசெழித்த கூடலுற்ற கோவிலுத்தமி
நவில் கிருபைத்தமிழ்விதரண மதுரகவிப்பெருமாள்

எடுப்பு

சொன்னசந்த விஸ்தாரி சொன்
சோபனமாமதுரைத் தேவி சுரமுனிவர்கள்தொழு
மோகனயானைமுதற்சாமி முருகனும்படி விளை
யாடியவீர துரைச்சானி அழகுருபதமலர் (அருள்)

ராகமாலிகை பல்லவி தாளம்: ஆதி

(ஸ்ரீராகம்)

1. வாமதுரை நகர் மீனலோசனியே ஸ்ரீ
ராகமாமணியே (வா)

அனுபல்லவி

சோம சுந்தரரு மேமகிழ்ந்த சுகு
மாரி செந்தமிழு மேபுரிந்தருள (வா)

(தோடி) (சரணம்)

2. சீர் மிகுந்திடும் தோடி
செப்பினின் பாதந்தேடி
ஆர்வமுடன் கொண்டாடி
அண்டிய தொண்டனென் மே—லேன் மோடி (வா)

(பைரவி)

3. கலந்தருளும் பைரவி
ரத்ன மூக்குத்திக்காரி
வரந்தருவாய் பொன்.தேவி
வரையரசன் குமாரி (வா)

(மோகனம்)

4. ஞானமோகனராணி
நாவலர்க்குதாரணி
எனம்மாயென்னைப்பேணி
யிருநற்றிரு நீரணி

(ஆனந்தபைரவி)

5. நாளுமுந்தன் துணையே
ஆனந்தபைரவியே
நாரணன் சோதரியே
காரணி நீகௌரியே (வா)

(கல்யாணி)

6. நித்யமங்கள ராணி
நீதமுறுங்கல்யாணி
கற்பலங்கார வீரி
கவிப்பெருமாளின்னேரில் (வ)

மங்களவாழ்த்து.

தாளம் ஏகம் (சர்ச்சனர்கள் என்ற நோட்மெட்டு)

சங்கரச்சடாதார்க்கும் அம்பிகைக்கும் மங்களம்
சங்குசக்கர நாரணற்கும் மங்கைலக்ஷுமி மங்களம்
சதுர்மறைவே—தனுபமதவா ரணமுகர்க்கும் மங்களம்
சகலபுலவற்கருளுங்கமச் சரஸ்வதிக்கும் மங்களம்
செங்கைவேல்முருகனுக்கும் சேவல்மயிலும் மங்களம்
தேவயானைவள்ளி ஞான சீலருக்கும் மங்களம்
சித்திரசர—பக்கவிமணி முத்துசாமி மங்களம்
சிர்சிறந்த நேசசங்கர தாசருக்கும் மங்களம்
பண்புமேவுமங்கமுத்துப் பாவலற்கு ம் மங்களம்
பரதவித்வ நாச்சிமுத்துக் குருவவற்கு மங்களம்
பகருமென்மா—ணவர்கள்கல்விப்—பவிசுவாழ்க மங்களம்
பார்புகழ்ந்திடுங் கோவிந்தசாமிவாழ்க மங்களம
நம்புமாமறையவ ரியம்பும்வேத மங்களம்
நானிலத்தில் வாழுதூய மாதர்கற்பின் மங்களம்
நாவலப்பெரு—மாள்சொலித்தமிழ்—கீதம்வாழ்கமங்களம்
நலவறஞ்செயுமகிபர்சந்ததி நாளும்வாழ்க மங்களம்

சுபம். சுபம். சுபம்.

உ

சிவமயம்.

விளம்பரம்,

அய்யா,

திண்டுக்கல் கச்சேரித்தெரு முனிசிபல் பெண்பாடசாலைக்கு எதிரில் கமிஷன் மண்டி மகா-ா-ா-ஸ்ரீ வாதராஜுலு நாயுடு அவர்கள் கட்டிடத்தில் விஜயரெங்கம் பிரஸ் என்று திருநாமமிட்டு அச்சுத்தொழிற்சாலை நடத்தி வருகின்றேன்.

ஒவ்வொருஆர்டர்களையுங்கவனித்துகுறித்தநேரத்தில் குறைந்த சார்ஜ்க்கு நாகரீகமான (டைப்ஸ்) எழுத்துக்களாலும், பார்வையான பார்டர்களாலும், அழகிய பிளாக்கைக்கொண்டும், பயிண்டிங், ரூலிங் முதலிய வேலைகளும் கைதேர்ந்த வேலையாட்களைக்கொண்டும் நடத்துவதால் ஓர்முறை ஆர்டர் கொடுத்து நலத்தை உணர்வீர்களாகவும்.

தங்கள் விதேயன்,

விஜயரெங்கம் பிரஸ், திண்டுக்கல். } K. பாலகுருசாமி நாயுடு, புரோப்ரைட்டர்.